மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 06 புதன்கிழமை 23.08.2023 அதிர்வு 23

## திருமலையில் குளவி கொட்டி இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

திருகோணமலை, வெருகல் மாவடிச்சேனை கிராமத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெருகல் – மாவடிச்சேனை 04



# சரத் வீரசேகரவின் மீது கடும் நடவடிக்கைக்கு சுமந்திரன் கோரிக்கை

### சபையில் சபாநாயகரிடம் வலியுறுத்து

கொழும்பு, ஓகஸ்ட் 23

முல்லைத்தீவு நீதிவானைத் தனிப்பட்ட முறையில் மிக மோசமாக நாடாளுமன்றத்தில் விமர்சித்ததன் மூலம் நாடாளுமன்றத்தின் கௌரவத்தைக் கீழ்மைப் படுத்தி மிகக் கேவலமாக நடந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுக்கு எதிராகச் சபாநாயகர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின்பேச்சாளரும்நாடாளுமன்றஉறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இன்று சபையில் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். 04



## கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சாட்சியாளரே சுட்டுக் கொலை!

பதுளை, அப்புத்தளை பகுதியிலுள்ள சுற்றுலா விடுதியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் தெற்கில் நடந்த பாரிய கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சாட்சியாளர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 04

### வடக்கு, கிழக்கு, மலையகத்திலும்

## பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு குளிர்காய முற்படுகின்றார் ரணில்

### அநுர பகிரங்கக் குற்றச்சாட்டு



"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் எனத் தமிழ் மக்கள் பரந்து வாழும் பிரதேசங்களில் பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு மக்களைச் சூடாக்கி அதில் குளிர்காய முற்படுகின்றார்."

– இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டினார்.

தனது நிகழ்ச்சி நிரலை 04



## நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

சிங்கப்பூருக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நாடு திரும்பியுள்ளார்.

ஜனாதிபதி தலைமையிலான ஏழு பேர் கொண்ட தூது குழு தனது சுற்றுப் பயணத்தை நிறைவு செய்து நேற்று இரவு 11.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட உயர்மட்ட தரப்பினரைச் சந்தித்து இரு தரப்பு பேச்சு நடத்தினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## மலையகத்தில் குழந்தையுடன் மாயமான தாய் சடலமாக மீட்பு!

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை, லோகி தோட்டத்திலிருந்து தனது குழந்தையுடன் காணாமல் போயிருந்த தாய் உயிரிழந்துள்ளார்.

லோகி தோட்டத்தில் உள்ள தெப்பக் குளத்தில் அவரின் சடலம் மிதந்து கொண்டு இருக்கின்றது எனவும், அதனை மீட்பதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அங்கிருந்து கிடைத்த தகவல் தெரிவித்தது.

தனது ஒன்றரை வயது 04

# புதிய இராஜதந்திரிகள் நற்சான்றிதழ் கையளிப்பு



இலங்கைக்கான புதிய தூதுவர்களாக நியமனம் பெற்றுள்ள இருவரும், உயர்ஸ்தானிகர் ஒருவரும் இன்று (23) ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ் பத்திரங்களைக் கையளித்தனர்.

இத்தாலி குடியரசு மற்றும் ஜேர்மனி சமஷ்டிக் குடியரசு ஆகியவற்றின் இலங்கைக்கான புதிய தூதுவர்களும், பிரித்தானிய ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அயர்லாந்துக்கான புதிய உயர்ஸ்தானிகருமே இவ்வாறு நற்சான்றிதழ் பத்திரங்களைக் கையளித்தனர்.

ஜனாதிபதி அலுவலகத்துக்கு வருகை தந்த தூதுவர்களை தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க வரவேற்றார்.

நற்சான்று பத்திரங்களைகே கையளித்தவர்களின் விவரம் கீழ் வருமாறு:-

01. பிரித்தானிய ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அயர்லாந்துக்கான உயர்ஸ்-தானிகர் ஆண்ட்ரூ பெட்ரிக்

02. ஜேர்மனி பெடரல் குடியரசின் தூதுவர் - கலாநிதி பெலிக்ஸ் நியூமன்

03. இத்தாலி குடியரசின் இலங்கைக்கான தூதுவர் - டாமியானோ பிரான் கோவிக்

நற்சான்று பத்திரங்களைக் கையளித்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன உள்ளிட்டவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# இனங்களிடையே புரிந்துணர்வு இல்லாதவரை 13 ஐ நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை

## ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த முன்மொழிவில் முஷாரப் எம்.பி. தெரிவிப்பு

(எஸ். மௌலானா)

இனங்களிடையே பரஸ்பரம் புரிந்துணர்வு, நம்பிக்கை ஏற்படாதவரை 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ். எம்.எம். முஷாரப் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்துள்ள அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான தனது முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையிலேயே அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் காணி விநியோகம், நிர்வாகம், நிதி மற்றும் பொலிஸ் அதிகாரம் தொடர்பாக கலந்துரையாடி, தீர்வுகளை எட்டுவதற்காக இம்மாகாணத்தை சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே அர்த்தமுள்ள கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதிகாரப் பகிர்வை முன்னிறுத்தியே அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் அனைத்து சமூகத்தினரும் அர்ப்பணிப்புகளை செய்வதற்கு தயாராக வேண்டும்.

இன சமத்துவமும் தனிநபர் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மாகாண அரச நிர்வாக செயற்பாடுகளில் அனைத்து சமூகங்களதும் வகிபாகங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

இனங்களிடையே புரிந்துணர்வின்மை, சந்தேகம், அவநம்பிக்கை மேலோங்கியிருக்கும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அனைத்து மத, சமூக குழுக்களிடையேயும் பரஸ்பரம் புரிந்துணர்வு, நம்பிக்கை மற்றும் ஒற்றுமை கட்டியெழுப்பப்பட வேண்டும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தை அர்த்தமுள்ள வகையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாயின் முதலில் இவ்வாறான அடிப்படை விடயங்கள் நிறைவு செய்யப்படுவது அவசியமாகும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.







# நிந்தவூரில் இரத்தான முகாம்

(ஏ.எல்.எம்.)

நிந்தவூர் கடற்கரை பிர்தௌஸ் ஜும்ஆ பள்ளிவாசலின் 36 வருட பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று நடைபெற்றது.

பிர்தௌஸ் ஜும்ஆ பள்ளிவாசல் சமூக சேவைப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த இரத்ததான முகாம் பள்ளிவாசல் வளாகத்தில் இடம்பெற்றது.





பள்ளிவாசல் பேஸ் இமாம் அல்-ஹாபில் மௌலவி ஏ.பீ.எம்.சிம்லி தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் பெருந்தொகையானோர் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர்.


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



உலக சமுதாய சேவா சங்கம் - கொழும்பு மண்டலம்,
இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை

கொழும்பு அறிவுத்திருக்கோயில்
SKY
யோகா நிலையம்
திறப்பு விழா

27.08.2023
ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி
அறிவுத் திருக்கதவு திறத்தல்

திறந்து வைப்பவர்:
உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,
அருள்நிதி பத்மஸ்ரீ SKM மயிலானந்தன் அவர்கள்

திறப்புவிழா நிகழ்ச்சிகள்
இடம்: இராமகிருஷ்ண மிஷன் பிரதான மண்டபம்
காலை அமர்வு 10.30 - 1.00 மணி வரை
மாலை அமர்வு 4.30 - 8.00 மணி வரை

சிறப்புரை
திருமதி பாரதி பாஸ்கர்
பட்டிமன்றப் பேச்சாளர், சென்னை, தமிழ்நாடு

இல. 53 1/A, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06, இலங்கை.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சரத்வீரசேகரவின்...**

சரத் வீரசேகரனின் நேற்றைய உரையையொட்டி இன்று நாடாளுமன்றத்தில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பி சுமந்திரன் கருத்து வெளியிட்டார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு:-

"சரத் வீரசேகர, இது இரண்டாவது தடவையாக இப்படி மோசமான உரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றார். இந்த நாட்டைச் சேர்ந்த சிங்கள மகனாகிய எனக்கு தமிழ் நீதிபதி ஒருவர் எப்படி உத்தரவிட முடியும் என்று இன வாதப் போக்கில் அவர் இந்தச் சபையில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

அவர் நேற்று இந்தச் சபையில் பேசும்போது ஒரு நீதிபதியின் - முல்லைத்தீவு நீதிவானின் - செயற்பாட்டைக் குறிப்பிட்டு, அவரது தனிப்பட்ட நடவடிக்கையாக அதை விமர்சித்து, அவரை ஒரு மனநோயாளி எனவும், அவரது மனைவி பற்றியெல்லாம் பிரஸ்தாபித்து, மிக மோசமான உரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றார். இது நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 83 ஆம் பிரிவை மீறும் செயல்.

ஒரு நீதிபதி நீதி நிர்வாக விடயத்தையொட்டி மேற்கொள்ளும் நடவடிக்கையைத் தனிப்பட்ட செயற்பாடாக விமர்சிக்க முடியாது. ஒரு காத்திரமான பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே, அப்படியான விடயத்தை விமர்சித்து விவாதிக்க முடியும்.

இது, இரண்டாவது தடவை அவர் மேற்கொள்ளும் இத்தகைய மோசமான செயற்பாடு. முதல் தடவை அவர் இதனைச் செய்த போது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போன்றவை கடுமையாக ஆட்சேபித்தன. அச்சமயத்தில் நான் இங்கு ஏற்கனவே ஆற்றிய உரை ஒன்றை அவர் ஆதாரம் காட்டி, நானும் அப்படி நடந்து கொண்டேன் என்று சமாதானம் கூற முற்பட்டார்.

என்னுடைய உரை வித்தியாசமானது. நான் நீதிமன்றம் ஒன்றின் விசேட முடிவை - தீர்மானத்தை - விமர்சித்தேன். நான் எந்த நீதிபதியின் பெயர் குறிப்பிட்டோ அல்லது அவரின் நடவடிக்கை குறித்தோ விமர்சிக்கவில்லை.

நீதிமன்றங்களின் தீர்மானங்கள், முடிவுகள் இந்தச் சபையில் மட்டுமல்ல, சபைக்கு வெளியிலும் பகிரங்கமாக விமர்சிக்கப்படலாம். அதில் நீதிமன்ற அவமதிப்பு எதுவும் இல்லை.

இரண்டு தடவைகளும் அவர் (சரத் வீரசேகர) நீதிபதியின் செயற்பாட்டைத் தனிப்பட்ட முறையில் விமர்சித்திருக்கின்றார்.

இந்த நாட்டைச் சேர்ந்த சிங்களவனான எனக்கு, தமிழ் நீதிபதி எப்படி உத்தரவிட முடியும் என்று அவர் இங்கு கூறி இருக்கின்றார். அந்த நீதிபதி மனநோயாளி என்று விமர்சித்திருக்கின்றார். இது மிக மிக மோசமான உரிமை மீறலாகும்.

இது வெறுமனே நாடாளுமன்ற நிலையியல் கட்டளை விதிகளை மீறும் செயல் மட்டுமல்ல, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் மிக மோசமான மனித ஒழுக்க மீறல் நடவடிக்கையுமாகும். அத்தோடு இந்தச் சபையின் உயர் கௌரவத்தைக் கேவலப்படுத்தி, கீழ்மைப் படுத்தும் செயற்பாடும் கூட. இந்த விடயத்தில் சபாநாயகரின் கடும் நடவடிக்கை அவசியம்.

அவரது உரை 'ஹன்சாட்' பதிவில் இருந்து நீக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல. இந்தச் சபையின் சிறப்புரிமையை இத்தகைய மோசமான நடவடிக்கை மூலம் மீறியமைக்காக அவர் மீது சபாநாயகர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்றார் சுமந்திரன் எம்.பி.

---

**திருமலையில்...**

கிராமத்தில் வசிக்கும் அழகுவேல் இராசகுமார் (வயது 30) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் நேற்று பனை மரத்தில் ஏறி பனை ஓலை வெட்டியபோது அதில் இருந்த குளவிக்கூடு கலைந்து கொட்டியது எனவும், அவர் சிகிச்சைக்காகக் கதிரவெளி வைத்தியசாலையில் மாலை 3 மணியளவில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு - வாழைச்சேனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது இரவு 9 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

மரணம் குறித்த விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

**மலையகத்தில்...**

குழந்தையுடன் குறித்த தாய் நேற்று முதல் காணாமல்போயிருந்தார். இந்நிலையிலேயே இன்று காலை அவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குழந்தை எங்குள்ளார் என்பது பற்றியும் தேடுதல் இடம்பெற்று வருகின்றது.

சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

**பிரச்சினைகளை...**

நிறைவேற்றுவதற்காக சிறுபான்மை - பெரும்பான்மை இனங்களுக்கிடையில் வன்முறையைத் தூண்டக் கூடிய வகையில் கருத்துக்களை வெளியிடும் இனவாதிகளையும், அடாவடிக் குழுவினரையும் ஜனாதிபதி பயன்படுத்தி வருகின்றார் என்றும் அநுரகுமார எம்.பி. சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

"ஜனாதிபதித் தேர்தலையொட்டியே இந்த மோசமான செயல்களில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுகின்றார். தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் அடாவடித் தனங்களைத் தற்காலிகமாக நிறுத்தி விட்டு வாக்கு வங்கியைப் பலப்படுத்துவதே ரணிலின் திட்டமாகும். எனவே, மூவின மக்களும் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதி ரணிலுக்குப் பந்தம் பிடிக்கும் அரசியல் பிரதிநிதிகளும் இதை உணர்ந்து செயற்பட வேண்டும்." - என்றார்.

---

**கொலைச்சம்பவத்துடன்...**

படுகாயமடைந்த மற்றொருவர் தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாத்தறை, கந்தர பகுதியைச் சேர்ந்த 42 வயது நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## அம்பாறையில் அறுவடை மும்முரம்!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் வேளாண்மை அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

# நிந்தவூர் சுகாதார அதிகாரி பிரிவில்
# உணவகங்களில் திடீர் பரிசோதனை



(பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர் )

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம்.றயீஸ் வழிகாட்டலில் உணவே மருந்து - மருந்தே உணவு எனும் தொனிப்பொருளில் உணவகங்களில் திடீர் பரிசோதனைகள் நேற்று (22) இடம்பெற்றது.

பரிசோதனைகள் தற்போதைய கால கட்டத்தில் ஹோட்டல்களின் தரத்தைப் பேணும் வகையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

இதில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற நீரில் கழுவாமல் வெட்டப்பட்ட வெங்காயம் மற்றும் சீர்குலைந்து காணப்பட்ட பாத்திரங்கள் மற்றும் ஒரு தடவை உபயோகித்த பின்னர் மீள்பாவனைக்காக வைக்கப்பட்ட எண்ணெய்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

இதனைத் தடுக்கும்பொருட்டும் மனித நுகர்வுக்கு பொருத்தமற்றதை கண்டால் மக்கள் விழிப்புடன் இருந்து 0672250834 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தெரியப்படுத்துமாறு நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம்.றயீஸ் பொதுமக்களை கேட்டுள்ளார்.

இந்தப் பரிசோதனை நடவடிக்கையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி உட்பட பொது சுகாதாரப் பரிசோதகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரும் இந்தப் பரிசோதனை நடவடிக்கையில் கலந்து கொண்டனர்.







# நினைவகலா நினைவுகள்



பிறப்பு 21 * 10 * 1937
இறப்பு 23 * 08 * 2012

**இந்திரராசா செங்காரபிள்ளை**
**(சங்கர்)**



பிறப்பு 11 * 02 * 1936
இறப்பு 29 * 08 * 2009

**செங்காரபிள்ளை**
**பூரணபாக்கியம்**

நேற்று வரை எம்முடன் வாழ்ந்தீர்கள் என்றே
உள்ளத்து உணர்வலைகள்
ஆசையுடன் அசைபோடுகின்றன - என்றாலும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்.

505, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதித்துறை மீது அச்சுறுத்தல்

நாட்டின் நீதித்துறை பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகப் பல தரப்புகளில் இருந்தும் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது.

ஜனநாயக நாட்டின் சிறப்பான ஆட்சி முறைக்கு, அதற்கான மூன்று ஆட்சித்துறை தத்துவங்களும் தனித்துவமாகவும் சுயாதீனமாகவும் இயங்குவது அவசியம்.

சட்ட வாக்கல் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் நாடாளுமன்றம், நிறைவேற்றதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஜனாதிபதி, நீதித்துறை அதிகாரங்களை பிரயோகிக்கும் நீதிமன்றங்கள் போன்ற தரப்புகள் சுயாதீனமாகவும், தனித்துவமாகவும், அச்சுறுத்தல்களின்றியும் செயல்படுவது அவசியம்.

இதில், நீதித்துறை இப்போது பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

நிறைவேற்றதிகாரத்தை வைத்திருக்கும் ஜனாதிபதி, அந்தப் பதவியில் இருக்கும் வரை பல விடயங்களில் நீதி விசாரணைக்குட்படுத்தப்பட முடியாதவர் என்று சிறப்புரிமைகள், விசேட விலக்களிப்புகளைக் கொண்டிருக்கின்றார்.

அது போலவே, நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகள், வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள், நடவடிக்கைகள் போன்றவற்றை நீதிமன்ற விசாரணையில் கேள்விக்குட்படுத்த முடியாது என்ற சிறப்புரிமையும் விசேட சட்ட விலக்களிப்பும் உண்டு.

இந்த விஷயத்தை - சட்ட விலக்களிப்புகளை - பயன்படுத்தியே நீதித்துறையை அச்சுறுத்தும் கருத்து வெளிப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

உள்நாட்டுக்கடனின் மறுசீரமைப்புப் பொறிமுறை தொடர்பான அரசின் உத்தேசதிட்டத்தினால் நேரடியாகப் பாதிக்கப்படும் நாட்டின் தொழிலாளர் வர்க்கம் அதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்திற்குச் சென்றது. அந்த முறையீடுகளை விசாரணைக்கு ஏற்பதா என்று உயர் நீதிமன்றம் அவற்றைப் பரிசீலனை செய்து கொண்டிருந்த போது, 'நிதி விவகாரம் தொடர்பான கொள்கை முடிவுகளை எடுக்கும் அதிகாரம் நாடாளுமன்றுக்கு மட்டுமே உரியது. அதனை வேறு எவரும் முன்னெடுக்க முடியாது. அப்படி முடிவு எடுத்தால் அந்த முடிவுகளை ஏற்றுச் செயல்பட மாட்டேன்' - என்று சாரப்பட நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க, தேசிய சட்ட மாநாடு ஒன்றில் திடீரெனப் பகிரங்கமாக அறிவித்தார்.

உயர் நீதிமன்றம் அந்த விடயத்தை பரிசீலனைக்கு எடுத்த அதே சமயத்தில், நாடாளுமன்ற விவகாரங்களில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று சபாநாயகர் தம்பாட்டில் நாடாளுமன்றத்தில் அறிவிக்கின்றார்.

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் முன்னால் உள்ள பிணக்கு ஒன்று தொடர்பாக முல்லைத்தீவு நீதிவான் விடுத்த இடைக்கால உத்தரவையொட்டி அரசுத் தரப்பின் முக்கிய பிரதிநிதி - முன்னாள் பொதுஜனப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரா - 'முல்லைத்தீவு நீதிவான் ஒரு மனநோயாளி' என்று பேரினவாத வெறிப்போக்கில் நாடாளுமன்றில் விமர்சிக்கின்றார்.

நீதித்துறை இவ்வாறு மோசமான அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் இச்சமயத்தில், வழமையாக இத்தகைய விடயங்களில் விரைந்தும் உடனும் சீறியெழுந்து, நீதித்துறைச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இப்போது இவ்விடயங்களில் பம்முகின்றது. சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் ஆலோசனை கலக்கின்றோம், விரைவில் பதில் தருவோம் என்று அந்த அமைப்பும் நீதித்துறை அச்சுறுத்தலுக்குள்ளாகும் கேவலத்துக்குத் துணை போவது போல செயல்படுகின்றது.

ஆக, எதிர்க்கட்சித் தலைவரும், பிரதான எதிர்க்கட்சியின் சில பிரமுகர்களும்தான் நீதித்துறையின் சுயாதீனம், சுதந்திரம், தனித்துவத்துக்காகக் குரல் எழுப்பி நிற்கின்றார்கள்.

இலங்கை ஆட்சித்துறைத் தத்துவத்தின் சீத்துவம் இது...!

# அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் நிலையான சொத்துக்கள் இல்லாமல் போகும்

## சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் மயூரன்

(த.சுபேசன்)



இலங்கை அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக எதிர்காலத்தில் நாட்டுக்கென நிலையான சொத்துக்கள் இல்லாமல் போகும் நிலை காணப்படுகிறது.

இவ்வாறு சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் செ.மயூரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் ஊடகங்களைச் சந்தித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்–

தற்போது இலங்கையில் சீனாவினுடைய ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

சீனாவின் போர்க் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகம் வருவதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் போர்த்தளம் அமைப்பதுதான் சீனாவுடைய நோக்கமாக தெரிகின்றது.

இலங்கையில் சீனா போர்த்தளம் அமைக்குமானால் இலங்கை சீனாவுக்குள் உள்வாங்கப்படும் நிலை ஏற்படும்.

அத்துடன் இலங்கையின் தற்போதைய அரசு அரச சொத்துக்களை விற்கும் மற்றும் குத்தகைக்கு விடும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றது.

அரச ஊடகமான ரூபவாகினி கூட்டுத்தாபனத்தைக் கூட பத்து வருட குத்தகைக்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி தனது காலத்தில் அதிக சொத்துக்களை குத்தகைக்கு வழங்கி வருகிறார். இதனால் எதிர்காலத்தில் நாட்டுக்கென நிலையான சொத்துக்கள் இல்லாமல் போகும் அபாய நிலை காணப்படுகிறது. –என்றார்.

# வாழ்வாதார மேம்பாட்டுக்கு கால்நடைகள் வழங்கல்



(பௌசுல் றிபாஸ்)

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆலிம் நகர் கிராமத்தில் பின்னடைவான கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான கிராமிய வீட்டு ஆடு வளர்ப்புத் திட்டம் எனும் தொனிப் பொருளில் கால்நடைகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சார் தலைமையில் நேற்று (22)நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல். ஆகிர், மிருக வைத்திய அதிகாரிகளான றிப்கான், சஜீனா, கால் நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ.சஹ்ர்பான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எல். தையூப், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருதில் தொடரும் கடலரிப்பு கட்டடங்கள் இடிந்துவிழும் நிலையில்



(ஏ.எஸ்.மௌலானா, யூ.கே.காலிதீன்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் தொடரும் கடலரிப்பு காரணமாக மஸ்ஜிதுல் ஹஸனாத் பள்ளிவாசலின் ஒரு பகுதி கடுமையாக சேதமுற்றுள்ளது. சுற்று மதிலின் பின்புறம் கடலுக்கு இரையாகியுள்ளது.

ஒலுவில் துறைமுக நிர்மாணத்துக்குப் பின்னரான காலப் பகுதியில் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறிமாறி கடலரிப்பு உக்கிரமடைந்து காணப்படுகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் கடலரிப்பு காரணமாக சாய்ந்தமருது பிரதேசத்தில் சிறுவர் பூங்கா, மீனவர் வாசிகசாலை, பௌசி விளையாட்டு மைதானம், மாளிகைக்காடு கலாசார மண்டபம் என்பவற்றின் பின்புற சுற்றுமதில்கள் இடிந்து வீழ்ந்தன. வாடிகள், தென்னந் தோப்புகளும் காவுகொள்ளப்பட்டுள்ளன.

தற்போது கடந்த சில நாள்களாக உக்கிரமடைந்துள்ள கடலரிப்பால் ஹஸனாத் பள்ளிவாசலின் பின்புற கட்டடம் சேதமடைந்துள்ளது. அத்துடன் அதனைச் சூழவுள்ள கட்டடங்களும் பாதிப்படைந்துள்ளன.

இவ்விடயம்பற்றிதிகாமடுல்லமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைஸால் காசிமின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அவர், உடனடியாக கரையோரம் பேணல் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் என்பவற்றின் உயரதிகாரிகளைத்தொடர்புகொண்டுநிலைமைகளை எடுத்துக் கூறியுள்ளார். கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.



# விளையாட்டு உபகரணம் வழங்கல்



(நூருல் ஹுதா உமர் )

மனாரியன் 88 அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க மருதமுனை எலைட் விளையாட்டு கழகத்துடனான சினேகித பூர்வமான கலந்துரையாடலும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கலும் அண்மையில் இடம்பெற்றன.

பர்வின் ட்ரடிங் நிறுவனம் மற்றும் லதான் அக்ரோ இன்டநஷனல் நிறுவன பணிப்பாளர் அல் ஹாஜ் கலில் முஸ்தபா தலைமையில் மருதமுனை பிரதான வீதி அமைந்துள்ள முஸ்தபா கம்பளைஸ் அலுவலகத்தில் இவை இடம்பெற்றன.

எலைட் விளையாட்டுக் கழகக் கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது எலைட் விளையாட்டு கழக வளர்ச்சிக்காக விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# தோட்டத் தொழிலாளர் பிரச்சினைக்கு சரியான தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்



## எல்கடுவ தோட்ட சம்பவம் தொடர்பில் சஜித்

மாத்தளை எல்கடுவ தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுச் சரியான தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

அவர்கள் தற்காலிகமாக கட்ட அனுமதித்த வீடுகள் இடிக்கப்பட்டன. இது தவறான செயல். இதில் முக்கிய விடயம் என்னவென்றால், இது ஒரு அரச தோட்டத்தில் நடந்த சம்பவமாகும். இதற்கு அமைச்சரே பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (22) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு–

மாத்தளை எல்கடுவ பிரதேசத்தில் ரத்வத்தை கீழ் பகுதியில் வசித்து வந்த தோட்ட சமூகத்தை சேர்ந்த 3 குடும்பங்களை சேர்ந்த அப்பாவி மக்கள் 14 பேர் தோட்டத் துறையில் உள்ள தோட்ட உதவி முகாமையாளரால் தனது கொடூரமான சகாக்கள் சிலருடன் சேர்ந்து வெளியேற்றப்பட்டனர்.

அவர்கள் தற்காலிகமாக கட்ட அனுமதித்த வீடுகள் இடிக்கப்பட்டன. இது தவறான செயல். இதில் முக்கிய விடயம் என்னவென்றால், இது ஒரு அரச தோட்டத்தில் நடந்த சம்பவமாகும். இதற்கு அமைச்சரே பொறுப்பேற்க வேண்டும்.

அமைச்சர் அங்கு சென்று போலியான பாசாங்கு செய்வதில் பயனில்லை. இந்த அரசு பெருந்தோட்டச் சமூகத்தின் மீது காட்டும் அக்கறை இந்த நடவடிக்கையின் மூலம் தெளிவாகத் தெரிகிறது. எத்தனை பேர் இந்தப் பக்கத்தில் இருந்து அந்தப் பக்கம் சென்று அரசுக்கு உதவி செய்தாலும் தோட்ட மக்களுக்கு அரசால் நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. தெளிவாக, இந்த தோட்ட மக்களை பயமுறுத்தி, அவர்களின் வீடுகளை சேதப்படுத்திய அதிகாரிகள் மட்டுமல்ல, அதற்குப் பொறுப்பான அமைச்சரும் இந்த சபையில் பதில் சொல்ல வேண்டும்.

சபாநாயகர் வசிக்கும் பிரதேசத்திலும் தேயிலை தோட்டங்கள் உள்ளன. இத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெருந்தோட்ட சமூகத்தின் வியர்வை, கண்ணீர் மற்றும் கடின உழைப்பால் எமது நாட்டுக்கு டொலர்கள் கிடைக்கின்றன. நாங்கள் அவர்களைக் கவனிப்பது கிடையாது. அவர்களுக்குச் சுகாதாரம் மற்றும் கல்வி உட்பட பல பிரச்சினைகள் உள்ளன. இந்த நேரத்தில் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். இந்த சபைக்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

அவருக்கு கீழ் உள்ள அரச தோட்டத்தில் தான் இந்த கொடூர சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்த கொடூரத்தை வன்மையாக கண்டிக்கிறோம். இவர்கள் இப்போது பொய்க் கூச்சல் போடுகிறார்கள். தோட்ட மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள். ஆனால் என்ன செய்தார்கள் என்று பாருங்கள்.

பெருந்தோட்ட சமூகம் இந்நாட்டின் பிரஜைகளாக செயற்பட்டு அந்நிய செலாவணியைப் பெற்று கொடுக்க ஆரம்பித்து இந்த வருடத்துடன் 200 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. ஆனால் இந்த மலையக பெருந்தோட்ட சமூகம் எல்லா வகையிலும் மாற்றாந்தாய் கவனிப்பையே பெற்று வருகின்றனர்.

இந்த மக்கள் பிரதிநிதிகள் இந்த இடத்திற்கு வந்துள்ளனர். அமைச்சர் ஆராய்ந்து பார்த்ததாக சொன்னாலும்,கடமையும், பொறுப்பும் நிறைவேற்றப்படவில்லை. எப்போது இதற்கு சரியான –சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.?–என்றார்.

# சம்மாந்துறை ஓ.ஸி.டி.அமைப்பால் 10 ஆவது வீடு கையளிப்பு





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

“2030 ஆம் ஆண்டில் யாவருக்கும் உறையுள்” எனும் தொனிப்பொருளில் சம்மாந்துறை ஓ.ஸி.டி. அமைப்பின் ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்ட பத்தாவது வீடு கையளிக்கும் நிகழ்வு அதன் செயலாளர் முஹம்மட் சரோஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த 10 ஆவது வீடு சம்மாந்துறை ஜபல் பள்ளிவாசல் மஹல்லாவை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சமூக சேவையாளர் விஞ்ஞான முதுமாணி ஓ.ஸி.டி. அமைப்பின் தலைவர் அஸ்மி யாசின் கலந்துகொண்டார். ஓ.ஸி.டி. அமைப்பின் ஆலோசகர்கள் அதன் நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.



# பட்டிருப்பு பாடசாலையின் ஆண்டு நிறைவுப் போட்டி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) அதன் 104 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு க.பொ.த. உயர்தர துறை சார்ந்த மாணவர்களுக்கு இடையே பொது அறிவு வினாவிடைப்போட்டியை நடத்தியது.

அதிபர் எம்..சபேஸ்குமார் வழிகாட்டலிலும், உதவி அதிபர் ஆ. கலாபராஜனின் நெறிப்படுத்தலிலும் மற்றும் பிரதி அதிபர், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள் ஆசிரியர்களது பங்களிப்புடனும் போட்டிகள் நடைபெற்றன.

இறுதிப் போட்டியில் கலைப்பிரிவு மாணவர்கள் முதலாம் இடத்தையும், விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள் இரண்டாம் இடத்தையும், கணிதப் பிரிவு மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

சிறந்த மாணவருக்கான விருதை கலைப் பிரிவு மாணவன் வீ.ஹரேந்திரன் பெற்றுக் கொண்டார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் கைதான நபர் பொலிஸில்

(வடிவேல் டினேஸ்)

அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சின்னப்பனங்காடு மஹாசக்தி கிராமத்தில் ஐஸ் போதை பொருள் விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவர் 38 கிறாம் ஐஸ் போதை பொருளுடன் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதிக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் அக்கரைப்பற்று பொலிஸாரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் ஆராய்ந்த அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி கௌரவ எம்.எச்.எம் ஹம்சா, சந்தேக நபரை மூன்று நாள்கள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்யவும் பின்னர் பின்னர் சந்தேக நபரை சட்ட வைத்திய அதிகாரியிடம் உட்படுத்தி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறும் உத்தரவிட்டார்.

# மாணவர்களுக்குக் கொப்பிகள்: றோட்டரிக் கழகம் வழங்கியது



(வி.ரி.சகாதேவராஜா)


கல்முனை றோட்டரிக் கழகத்தின் 2023- 2024 ஆணடுக்கான தலைவர் ஏ.எல். ஏ. நாசர் தலைமையில் கல்முனை கல்வி மாவட்ட பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இந்த வேலைத் திட்டத்தின் முதற்கட்டமாக கடந்த 21ஆம் திகதி திராய்க்கேணி அ.தி.மு.க.க. பாடசாலை, கோளாவில் விநாயகர் வித்தியாலயம், மற்றும் மாணிக்கமடு அ.த.க. பாடசாலை ஆகிய மூன்றுக்கும் ஒரு லட்சத்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதியை கன்பேரா வெஸ்டர்ன் கிறிக் றோட்டரிக் கழகம் வழங்கியது. அந்தக் கழகத்தின் அங்கத்தவரான றொட்டேரியன் த.ரவீந்திரன் கலந்து கொண்டு அப்பியாசக் கொப்பிகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் செயலாளர் ம. குகதாசன், சமூக சேவைகள் பணிப்பாளர் மு.சிவபாதசுந்தரம், ஆ. சிதம்பரநாதன் மற்றும் கே.றதீசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்: ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்!



தமிழக கடற்றொழிலாளர்கள் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என மத்திய அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கையை சேர்ந்தவர்களால் தமிழக கடற்றொழிலார்கள் தொடர்ந்தும் தாக்கப்படுகின்றனர். இதனை தடுத்து நிறுத்த வேண்டும் என்று ஜெய்சங்கரிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரியுள்ளார்.

தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்கள் மீதான இலங்கையரின் தாக்குதல் அதிகரித்து வருகிறது எனவும் கடந்த 21 ஆம் திகதி மட்டும் ஒன்பது சம்பவங்கள் பதிவாகியுள்ளன என ஸ்டாலின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் தமிழக கடற்றொழிலாளர்களுக்கு மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்துவதுடன் அவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிப்படுகிறது என முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், உரிய தூதரக வழிமுறைகளைப் பயன்படுத்தி இலங்கை அரசுடன் தொடர்புகொண்டு, தமிழக கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்திட வேண்டுமென்றும் ஸ்டாலின் தனது கடிதத்தில் கேட்டுள்ளார்.

# நடிகர் விஜயகாந்தின் உடல்நிலை பின்னடைவு



தமிழகத்தின் முன்னாள் எதிர்கட்சி தலைவர், நடிகர் விஜயகாந்த் உடல் நிலையின் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என அவரது மகன் விஜய பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த விஜய பிரபாகரன் இதனை தெரிவித்துள்ளார்.

தனது தந்தையின் உடல்நிலை குறித்து பதிலளித்த அவர், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அவர் பழையபடி பேசுவாரா, நடப்பாரா என்றால், அதற்கான எல்லா முயற்சிகளையும் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

உங்கள் அனைவரையும் போல நாங்களும் நம்புகிறோம். இப்போதைக்கு விஜயகாந்த் நன்றாக இருக்கிறார். இந்த உடல்நிலையிலேயே அவர் 100 வயது வரை நன்றாக இருப்பார்.

விஜயகாந்த் மந்திரமான 'முடியாது என்பது முட்டாளுக்கு சொந்தமானது' என சொல்லுவார். அதைதான் எங்களது தாரக மந்திரமாக எடுத்துள்ளோம்.

என்னுடைய கனவை கூட ஒதுக்கி வைத்துவிட்டு தொண்டர்களுக்காக ஓடோடி வந்து வேலை செய்கிறேன் என்றும் விஜய பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

## 'கர்நாடகாவிடமிருந்து அதிகாரத்தை பறிக்க வேண்டும்'

தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வழங்கும் அதிகாரம் கர்நாடக அரசிடமிருந்து பறிக்கப்பட்டு, தன்னாட்சி அதிகாரம் பெற்ற அமைப்பிடம் வழங்கப்பட வேண்டும் எனவும் அப்போது தான் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு அதன் உண்மையான பொருளுடன் செயல் படுத்தப்படும் என்றும் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தி யுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மனசாட்சியும் இல்லாத கர்நாடக அரசு தமிழகத்திற்கு தண்ணீர் திறப்பதை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அணைகளில் தேவைக்கும் அதிகமாகவே தண்ணீர் வைத்துள்ள கர்நாடகம், தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வழங்க மறுப்பது கடுமையாக கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

# சந்திரயான்-3 திட்டத்தை விமர்சித்த நடிகர் பிரகாஷ்ராஜ் மீது வழக்கு பதிவு!

இந்திய விண்வெளி ஆய்வுமையம் நிலவின் தென்துருவத்தில் ஆய்வு செய்வதற்காக சந்திரயான் -3 விண்கலத்தைசெலுத்தியது.

இந்த நிலையில் நடிகர் பிரகாஷ் ராஜ் நேற்று முன்தினம் சமூக வலைத்தள பக்கத்தில் சந்திரயான்-3 திட்டத்தைவிமர்சித்து ஒரு பதிவை வெளியிட்டு இருந்தார்.

அதில், 'வாவ், நிலவில் இருந்து விக்ரம் லேண்டர் அனுப்பிய முதல் புகைப்படம்' என குறிப்பிட்டு 'ஒருவர் தேநீர் ஆற்றும்' புகைப்படத்தை பதிவிட்டு இருந்தார். இந்த பதிவில் அவர் மறைமுகமாக பிரதமர் மோடியை கேலி செய்கிறார் என பா.ஜ.கவினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில் கர்நாடக மாநிலம் பாகல்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த ஹனுமன் சேனா அமைப்பின் நிர்வாகி பிரமோத், பிரகாஷ் ராஜக்கு எதிராக பனஹட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தார். அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இதற்கு பிரகாஷ் ராஜ், வெறுப்பை விதைப்பவர்களுக்கு எல்லாமே வெறுப்பாகவே தெரிகிறது. ஒரு நகைச்சுவை காட்சியை பகிர்ந்தால் அதை தங்களுடன் தொடர்புபடுத்திக் கொள்கிறார்கள் என்று விளக்கம் அளித்துள்ளார்.

# பெலாரஸ் - போலந்து எல்லையில் பதற்றம்: ஹெலிகாப்டரை வழங்க அமெரிக்கா அனுமதி!





போலந்துக்கு அப்பாச்சி ரக தாக்குதல் ஹெலிகாப்டர்களை வழங்க அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.

பெலாரஸ் போலந்து நாட்டின் எல்லைக்கு அருகில் பிரமாண்ட இராணுவ பயிற்சியை நடத்தியுள்ளது.

இதனால் இரு நாடுகளின் எல்லையிலும் பதற்றம் அதிகரித்த நிலையில், போலந்து வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு மிகவும் பிரம்மாண்டமான ராணுவ ஆயுத அணிவகுப்பு நிகழ்ச்சியை தலைநகரில் சமீபத்தில் அரங்கேற்றியது.

இந்த அணிவகுப்பு நிகழ்ச்சி பெலாரஸ் நாட்டிற்கு மட்டுமின்றி ரஷ்யாவிற்கும் வழங்கப்படும் தக்க எச்சரிக்கை என சில மேற்கத்திய நாடுகள் கருத்து தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் அப்பாச்சி ரக தாக்குதல் ஹெலிகாப்டர்களை போலந்து நாட்டிற்கு வழங்கும் ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, சுமார் 12 பில்லியன் டொலருக்கு 96 ஹெலிகாப்டர்கள், 210 இயந்திரங்கள் மற்றும் பிற உபகரணங்களை போலந்து வாங்க உள்ளது. இதற்கு முன்னதாக அமெரிக்காவிடம் இருந்து ஆப்ராம்ஸ் டாங்கிகளை போலந்து வாங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 900 அடி உயரத்தில் தொங்கிய சிறுவர்கள்!



பாகிஸ்தானின் வடமேற்கில் உள்ள ஒரு பள்ளத்தாக்கில், ஆறு சிறுவர்கள் உட்பட எட்டு பேர் கேபிள் காரில் சிக்கி அந்தரத்தில் தொங்கிய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இவ்வாறு கேபிள் காரில் சிக்கி கொண்டவர்களை மீட்கும் பணியில் இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் தெரிவிக்கையில், அந்த 8 பேர் குழு பாடசாலைக்கு சென்று கொண்டிருந்தபோது கேபிள் கார் ஒன்று அறுந்து தரையில் இருந்து 900 அடி உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது என தெரிவித் துள்ளனர். சுமார் 4 மணிக்கு நேரத்திற்கு பின்னர் மீட்பு ஹெலிகொப்டர் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளன.

மேலும், அந்தரத்தில் சிக்கிய மாணவர்கள் அனைவரும் 10 முதல் 15 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றே தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த பகுதியில் போக்குவரத்து வசதிகள் இல்லாததால் தினமும் சுமார் 150 மாணவர்கள் கேபிள் கார் மூலம் பாடசாலைக்கு ஆபத்தான பயணத்தை மேற்கொள்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

## அகதிகளை ருவாண்டாவிற்கு அனுப்ப பிரித்தானியா முயற்சி!



புகலிடக்கோரிக்கையாளர்களை ருவாண்டாவிற்கு அனுப்ப பிரித்தானியா முயன்று வருகின்றது.

ஆனால், மேல்முறையீட்டு நீதி மன்ற நீதிபதிகள், புகலிடக்கோரிக்கையாளர்களை ருவாண்டாவுக்கு நாடு கடத்துவது சட்டவிரோதம், அது பாதுகாப்பான மூன்றாவது நாடு அல்ல என தீர்ப்பளித்துள்ளனர். பிரித்தானிய அரசு ருவாண்டாவை பாதுகாப்பான நாடு என்கிறது.

இதேவேளை, ருவாண்டா நாட்டவர்களுக்கு பிரித்தானிய புகலிடம் வழங்கியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.


இந்த நிலையில் பிரித்தானிய அரசு கூறுவதுபோல் ருவாண்டா பாதுகாப்பான நாடாக இருக்குமானால், அந்த நாட்டவர்கள் ஏன் பிரித்தானியாவில் புகலிடம் கோர வேண்டும் என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டிலிருந்து, பிரித்தானியா சுமார் 40 ருவாண்டா நாட்டவர்களுக்கு புகலிடம் வழங்கியுள்ளமை அதிகாரப்பூர்வ தரவுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

2011 இற்கும் 2021 இற்கும் இடையில், தங்கள் சொந்த நாட்டில் பாதுகாப்பு இல்லை என்று கூறி புகலிடம் கோரிய 37 ருவாண்டா நாட்டவர்களுக்கு பிரித்தானியா புகலிடம் வழங்கியுள்ளது.

ருவாண்டா பாதுகாப்பான நாடு என பிரித்தானிய அரசு கூறுகிறது. ஆனால், பிரித்தானிய உள்துறை அமைச்சகம் ருவாண்டா பாதுகாப்பான நாடு அல்ல என்பதை அங்கீகரித்துள்ளது.

அப்படியானால், ருவாண்டா நாட்டவர்களுக்கே ருவாண்டா பாதுகாப்பான நாடு அல்ல என்றால், மற்ற நாட்டவர்களுக்கு மட்டும் அது எப்படி பாதுகாப்பான நாடாக இருக்கும் என்பது எனக்கு புரியவில்லை என சர்வதேச அளவில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949